**IN THE COURT OF THE IIIADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No. 255/2016

Deposition of PW-2 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 20th day of March 2025.

| | | |
|---|---|---|
| Name | : ரவிகுமார் | Caste: |
| Father / Husband's Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

**முதல் விசாரணை:-**

நான்ஓமலூர் வட்டத்தில் வட்டாட்சியராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்துவந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ளது போல் முத்துசாமி, த/பெ.கந்தமூப்பன் என்பவரது வாரிசு சான்றிதழ் எடுத்துவந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ளது போல் ப.மு8099/2014 (அ2) நாள் 25.07.2014ம் தேதி ஓமலூர் தாசில்தார் வழங்கிய வாரிசு சான்றிதழ் தொடர்பான கோப்பு உண்மை நகல் சா.சாஆ.1 வரிசை.

மனுதாரர்களிடமிருந்து வாரிசு சான்றிதழ் கேட்டு மனு வந்தால் வருவாய் அலுவலர் அலுவலகத்தில் அறிவிப்பு வெளியிடுவார்கள். அறிவிப்பு வெளியிட்டு

ஒரு வாரத்திற்குள் எந்த ஆட்சேபனையும் வரவில்லை என்றால் உள்ளூர் விசாரணை நடைபெற்று வருவாய் ஆய்வாளர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்புவார். மேற்படி அறிக்கை அடிப்படையில் வட்டாட்சியர் மனுதாரர்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்குவார். உள்ளூர் விசாரணையின் அடிப்படையில் இன்பவள்ளி தான் முத்துசாமியின் வாரிசு என்று அறிக்கை வந்தது. அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இன்பவள்ளியின் தகப்பனார் முத்துசாமி என்பதை உள்ளூர் விசாரணை அடிப்படையில் தான் தெரிந்துகொண்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அடையாள அட்டைகள் எதுவும் பரிசீலனை செய்யப்படவில்லை.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

முத்துசாமி இறப்பு சான்றிதழையும், ஊரில் உள்ளவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் முறையாக விசாரித்து இன்பவள்ளி தான் வாரிசுஎன்று வாரிசு சான்று வழங்கியுள்ளேன்.

Sd/- L. Kalaivani,
III Additonal District Judge,
Salem.